F.Y.
March 2018

Reg. No. ......................................

Name ..........................................

108

# Part - II

# TAMIL

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool off time : **15** Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool off time' to get familiar with questions and to plan your answers.
- Read the instructions carefully.
- Read the questions carefully before answering.
- Calculations, figures and graphs should be shown in the answer sheet itself.
- Give equations wherever necessary.
- Electronic devices except nonprogrammable calculators are not allowed in the Examination Hall.

**பொதுவான விதிமுறைகள் :**

- வினாத்தாள் எழுதுவதற்கான நேரத்தைத்தவிர 15 நிமிடங்கள் அதிகமாக தரப்பட்டுள்ளது.
- அந்த 15 நிமிடங்களில் வினாக்களை புரிந்து கொண்டு, விடைகளை எழுதுவதற்கு திட்டமிடுவதற்காக உபயோகிக்கவும்.
- விடை எழுவதற்கு முன்னால் வினாக்களை கவனமாக படிக்கவும்.
- விடையளிக்குமாறு அறிவுறுத்தப்பட்ட வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்கவும்.
- வரைபடங்கள், படங்கள் மற்றும் கணக்கீடுகள் யாவும் விடைத்தாளிலேயே காண்பிக்கப்பட வேண்டும்.
- தேவையான இடங்களில் சமன்பாடுகள் கொடுக்கவும்.
- நிரல் படுத்தப்படாத கால்குலேட்டர்கள் தவிர மற்ற எந்த மின்னணு சாதனங்களும் தேர்வு எழுதும் ஹாலுக்குள் அனுமதிக்கப் படமாட்டாது.

**1, 2 வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. மதிப்பெண் ஒன்று வீதம்.** **2 × 1 = 2**

1. கடையெழு வள்ளல்களுள் பறம்புமலைத் தலைவன் என்று சிறப்பிக்கப்படுபவன்

   *(அ)* பாரி   *(ஆ)* ஓரி

   *(இ)* காரி   *(ஈ)* அதியமான்

2. உலகில் இயல்பாய் நிகழும் ஒரு நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக்கூறும் அணி

   *(அ)* உருவக அணி   *(ஆ)* உவமையணி

   *(இ)* தற்குறிப்பேற்ற அணி   *(ஈ)* வஞ்சப்புகழ்ச்சி அணி

**3 முதல் 5 வரையுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக. மதிப்பெண் மூன்று வீதம்.** **3 × 3 = 9**

3. அங்கதச் சுவை குறித்துச் சிறு குறிப்பு வரைக.

4. நவீனத்துவம் முன்வைக்கும் கருத்து நிலைகளைச் சுருக்கி வரைக.

5. நீலகிரி நிலச்சரிவு மற்றும் அது தொடர்பான விளைவுகளுக்கான காரணங்கள் பற்றிக் குறிப்பு வரைக.

**6 முதல் 10 வரையுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக. மதிப்பெண் நான்கு வீதம்.** **5 × 4 = 20**

6. எண்வகை மெய்ப்பாடுகளின் பெயர்களைத் தருக.

7. "கேள்விகளால்  
   கழற்றி விடப்படுகின்றன  
   குழந்தைகளின்  
   உலகம்"  
   என்ற கவிதை வரிகளில் குழந்தைகள் அனுபவிக்கும் துன்பங்களை விமர்சனக் குறிப்பாக எழுதுக.

8. "மனிதர்கள் இல்லாத உலகத்தில் விலங்குகளும் பறவைகளும் வாழமுடியும். ஆனால் மனிதரால் வாழமுடியுமா விலங்குகளும் பறவைகளுமற்ற உலகத்தில்" என்ற வைரமுத்துவின் கருத்தினை விவாதக் குறிப்பாக எழுதுக.

9. "பாரங்கள் தாங்காது வழியும்
பெரிய கண்ணீர்த் துளி
நினைவுகளைப் பொதிந்து வைத்த
வெள்ளைத்தாள்
துயரங்களின் கால்வாய்
சந்தோசங்களின் சமுத்திரம்"
இக்கவிதையை இரசனைக் குறிப்பாக எழுதுக.

10. பள்ளிச் சுற்றுலாவின் போது நீங்கள் கண்டு மகிழ்ந்த ஏதேனும் ஓர் இயற்கைக் காட்சி குறித்து வருணனைக் குறிப்பு தருக.

**11 முதல் 14 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுக. மதிப்பெண் ஐந்து வீதம்.** **3 × 5 = 15**

11. அறிவியலுக்கும் கலைக்கும் உள்ள வேறுபாட்டினை ஒப்பீடு செய்து ஒப்பீட்டுக் குறிப்பு தயார் செய்க.

12. "துருபதன் மகளைத் திட்டத்
துய்ந னுடனுற் பிறப்பை
இரு பகடை யென்றாய் - ஐயோ
இவர்க்கடிமை யென்றாய்
இனி பொறுப்பதில்லை"
இப்பாடலடிகளின் நயத்தைப் பாராட்டி எழுதுக.

13. 'புதுக்கவிதைகள் காட்டும் சமூகப் பிரச்சினைகள்' என்ற தலைப்பில் வானொலி உரை தயாரிக்கவும்.

14. சுற்றுச் சூழல் தினத்தில் உங்கள் பள்ளியின் தமிழ்மன்றம் சார்பாக நடைபெறும் விழிப்புணர்வு முகாமில், 'இயற்கைச் சீற்றங்களும் தடைசெய்யும் வழிமுறைகளும்' எனும் தலைப்பில் உரையாற்றும் பொருட்டு சொற்பொழிவுக் குறிப்பு தயாரிக்க.

**15 முதல் 18 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுக. மதிப்பெண் ஆறு வீதம்.** **3 × 6 = 18**

15. படையணி என்ற கேரளக் கலை வடிவம் போன்று நீங்கள் கண்டு ரசித்த ஒரு கலை வடிவத்தின் சிறப்புக்குறித்து உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

**16.** நாடகம் ஒன்றில் ஈடுபாடுடைய நீங்கள் நாடகக் கலைஞர் ஒருவரைப் பேட்டி கண்டு நாடகம் மற்றும் அதன் உத்திகள் குறித்து அறிந்து கொள்ளும் விதத்தில் ஆறு வினாக்கள் அடங்கிய வினாநிரல் தயாரிக்கவும்.

**17.** இன்று பெண்களுக்கு எதிரான பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. இக்காரணங்களை எடுத்துரைத்து 'பெண்கள் பிரச்சினைகளும் பாதுகாப்பும்' என்ற தலைப்பில் பத்திரிகைக்கு அனுப்பத் தலையங்கம் எழுதவும்.

**18.** உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு பள்ளியில் வெளிவரவிருக்கும் மலரில் வெளியிட 'பயண நூல்கள் தரும் பண்பாட்டுச் செய்திகள்' என்ற தலைப்பில் சிறுகட்டுரை தயார் செய்க.

**19 முதல் 21 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. மதிப்பெண் எட்டு வீதம். $2 \times 8 = 16$**

**19.** 'கலையே பண்பாட்டின் பிரதிபலிப்பு' என்ற கருத்தின் அடிப்படையில் நடைபெறும் கருத்தரங்கில் வாசிக்க, 'கலைகளின் வளர்ச்சியில் இலக்கியங்களின் பங்களிப்பு' என்ற தலைப்பில் கட்டுரை தயார் செய்க.

**20.** உலக சுகாதார தினத்தை முன்னிட்டு உங்கள் கிராம மன்றத்தில் நடைபெறும் கருத்தரங்கில் உரையாற்ற,'இயற்கையும் பாதுகாப்பும்' என்ற தலைப்பில் சொற்பொழிவு உரை தயார் செய்யவும்.

**21.** கீழே தரப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் தமிழ் மன்ற மலரில் வெளியிடுவதற்காக, 'சி.வை. தாமோதரம் பிள்ளையின் வாழ்வும் பணியும்' என்ற தலைப்பில் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை எழுதுக. தமிழ்த் தொண்டு - யாழ்ப்பானத் தமிழறிஞர் - கல்வியைத் தந்தையிடமே கற்றவர் - முத்துக்குமாரக் கவிராயரிடம் இலக்கிய, இலக்கணம் கற்றல் - ஓலைப் பிரதிகளை அச்சுப்பிரதிகளாக பதிப்பித்தல் - உரையாசிரியர் - வழக்கறிஞர் - துணையாசிரியர் - அரசு வழங்கிய 'இராவ் பகதூர்' விருது பெற்றவர்.